**டிசம்பர் - 14**

**"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." - மத் 5:7.**

மனிதன் அப்பியாசிக்கக்கூடிய மிகப்பெருமையான குணமும், மிகவும் பெரிய அளவிற்கு ஆசிர்வாதத்தைத் தானே கொண்டு வருகிறதுமான தேவனைப் போலொத்த குணமாகிய இரக்கம், பச்சாதாபம், தயவு ஆகிய இவைகளை அப்பியாசிப்பதே என்பது அநேகருக்குத் தெரியாது. ஆனால், இது உண்மை. நாம் அடைந்திருக்கிற அறிவு அல்லது குணசீலத்தின் மற்ற எதுவாயிருந்தாலும் சரி, இந்த ஒன்று நம்மிடம் இல்லாவிட்டால், ஒருபோதும் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டோம். அதாவது, நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டாவிட்டால், நம்முடைய பரமபிதாவும், நம்மிடத்தில் இரக்கம் காண்பிக்க மாட்டார் என்று சொல்லி, இரக்கத்தின் குணத்துக்குக் கர்த்தர் முக்கியத்துவம் கொடுத்து அறிவுறுத்துகிறார். இந்த இரக்கத்தை நாம் மன்னிப்புக்கும் தயவுக்கும் அறிகுறியான வெறும் வெளிப்படையானத் தோற்றமாக மட்டும் இருக்க நாம் கருதவில்லை என்பதை நிச்சயப்படுத்த "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்தத் தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்." என்று சொல்லி நமது கர்த்தர் இந்த விஷயத்தை விபரிக்கிறார். இரக்கமுள்ளவர்கள் மாத்திரமே இரக்கம் பெறுவார்கள். கர்த்தரின் கரங்களில் நாம் இரக்கம் பெறாவிட்டால், எல்லாம் நஷ்டமாகிவிட்டன. ஏனென்றால், சுபாவத்தின்படி மற்றவர்களைப்போல, நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் நீதியான ஆக்கினைக்குள்ளாகவும் இருந்தோம். **- Z 01, 332, 00, 70 (R 2895,2585).**

தீமையான நிலைமைகளின் மத்தியில் மாத்திரமே இரக்கத்தை அப்பியாசிக்க சாத்தியமாயிருக்கிறது. ஏனென்றால், இது பலவீனரையும் துர்பாக்கியமான நிலையிலுள்ளவர்களையும் விடுவிக்கிற தயையாகும். பலவீனங்களும், நிர்பாக்கியமும் சரீர பிரகாரமான, மனது சம்பந்தமான நீதிநெறி சம்பந்தமான, மத சம்பந்தமான வழிகளில் இருக்கின்றன. இப்படிப்பட்ட வழிகளிலான பலவீனமும், நிர்பாக்கியமும் இரக்கம் காட்ட நம்மை ஏவுகின்றன. இது வளர்ச்சியடைந்து சுத்தமாக்கப்பட்ட தன்மையை அடைகிறது. முதலாவது சரீரப்பிரகாரமான பலவீனமும், நிர்பாக்கியமும் இரக்கத்தை அப்பியாசிக்க ஏவுகின்றன. சிறிது காலத்திற்குப் பிறகு மனது சம்பந்தமான பலவீனமும், நிர்பாக்கியம் இவைகளின் கூக்குரலுக்கு செவிசாய்க்க அது கற்றுக் கொள்கிறது. இன்னும் பிறகு, நீதிநெறி சம்பந்தமான பலவீனம், நிப்பாக்கியம் இவைகளின் கூக்குரலைக் கவனிக்க அது கற்றுக்கொள்கிறது. இவைகள் எல்லாவற்றின் கடைசியில் இது மத சம்பந்தமான பலவீனத்திலும், நிர்பாக்கியத்திலும் அக்கறை காட்டுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இது மும்மடங்காக ஆசிர்வதிக்கப்படுகிறது. இது கொடுக்கிற நபரை ஆசிர்வதிக்கிறது. பெற்றுக்கொள்கிற நபரை ஆசிர்வதிக்கிறது. இதை கவனிக்கிற நபரை ஆசிர்வதிக்கிறது. இரக்கமுள்ள மனிதன் சாதாரணமாக தனது கூட்டாளிகளிடமிருந்து தனது தேவையில் இரக்கம் பெறுகிறான். ஆனால், அவன் தேவனிடமிருந்து தனது தேவையில் எப்பொழுதும், இரக்கம் பெறுகிறான். சாதாரணமாக, இரக்கமுள்ளவன் தனது இரக்கத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறது போல அதே வழிகளில் அவனுக்குத் தேவன் இரக்கத்தைக் கொடுக்கிறார். **- P 33, 177.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 18.25, 41.1, நீதி 3.3, 11.17, 14.21,22,31, 21.21, மாற் 11.25-26, எபே 4.32, கொலோ 3.12-13, 2தீமோ 1.16, எபி 6.10-11, யாக் 2.13, மத் 18.35, மீகா 6.8, லூக் 6.36, ரோம 12.8.**

**கோபுர வாசிப்பு : Z 05, 230 (R 3603).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் செய்த இரக்கமுள்ள செயல்கள் யாவை? ஏன்? எப்படி? பலன்கள் எவை?**